ருஹுணு பல்கலைக்கழகம் - 2021
-----------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ருஹுணு பல்கலைக்கழகத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று நிதியம் மற்றும் ஒதுக்கம் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தில் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் ருஹுணு பல்கலைக்கழகத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பல்கலைக் கழகத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது பல்கலைக்கழகத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையில் கணக்கீடு செய்தல் மற்றும்

பல்கலைக்கழகம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

பல்கலைக்கழகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பல்கலைக் கழகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளரின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக பல்கலைக்கழகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பல்கலைக் கழகத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்
- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பல்கலைக் கழகத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பல்கலைக் கழகம் செயற்படுகின்றதா எனவும்
- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்,
- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணக்கமின்மை

| | உரிய நியமங்களுடன் தொடர்புடன் இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 01 இன் பந்தி 99 இன் பிரகாரம், அனைத்து வருமான மிகைகள் அல்லது பற்றாக்குறைகளும் உட்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது சம்பளம் மீண்டும் அறவிடல், | 1998/8/18 திகதிய 737 இலக்கங் கொண்ட பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கையின் பிரகாரம் உடன்படிக்கைகள் மற்றும் பிணை முறிகளை மீறிய காரணத்தினால் அறவிடப்பட்ட | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அறவிடப்பட்டிருந்த பிணைமுறி பெறுமதி மற்றும் நிலையான வைப்புக்கள் வட்டி வருமானம் கூட்டுத்தொகை ரூபா 17,202,390 வருமானம் என இனங்காணாமல் அவற்றில் ரூபா 15,869,102 தொகை பிணை முறிகள் மற்றும் உடன்படிக்கை மீறல் நிதியக் கணக்கிற்கு மற்றும் ரூபா 1,333,288 தொகை அக்கிரஹார காப்புறுதிக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தமையால், ரூபா 17,202,390 இனால் மீளாய்வாண்டிற்கான மிகை மற்றும் 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு திரண்ட நிதியம் மற்றும் ஒதுக்கம் முறையே குறைவாக மற்றும் மிகையாக காட்டப்பட்டிருந்தது. | அனைத்து பணமும் தனியாக நிதியம் ஒன்று பேணப்பட்டு முதலீடு செய்யப்பட வேண்டியதுடன் அதன் மூலம் உழைக்கப்படும் வருமானம் மாத்திரம் பயன்படுத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்த காரணத்தினாலும், நாளாந்த செயற்பாட்டு தொழிற்பாடுகள் மூலம் உருவாக்கப்பட்ட வருமானம் ஒன்று அல்ல என்பதனாலும் பல்கலைக்கழகத்தின் வருமாமனம் ஒன்று என நிதிச்செயலாற்றல் கூற்றில் உட்படுத்த முடியாது எனவும், பதவியணி பிணைமுறிகள் மற்றும் உடன்படிக்கைகளை மீறல் மூலமாக கிடைத்த பணம், நிதியக் கணக்கிற்கு செலவு வைத்து நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டுள்ளது எனவும் மற்றும் உருவாக்கப்படும் நிதியத்தின் மூலம் உழைக்கப்பட்ட வட்டி வருமானம் மாத்திரம் அக்கிரஹார காப்புறுதி பங்களிப்புத் தொகை செலுத்துவதற்காக 2018.12.10 திகதிய 2018/15 இலக்கங் கொண்ட பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கையின் படி அக்கிரஹார காப்புறுதி நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டுள்ளது என. | |
| (ஆ) | இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமம் 07 இன் 65 ஆம் பந்தியின் பிரகாரம் நடைமுறையல்லாத சொத்துக்களின் ஆக்கபூர்வமான ஆயுட்காலத்தை வருடாந்தம் மீளாய்வு செய்திருக்காமையால் ரூபா 6,880,250 தொகை கிரயத்தையுடைய 08 வாகனங்கள் முழுமையாக பெறுமானத் தேய்வு செய்யப்பட்டிருந்த போதிலும் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டு காணப்பட்டது. அதன்படி ஏற்பட்டிருந்த | கொவிட் தொற்றுநோய் நிலைமையின் காரணமாக பெறுமதி மதிப்பீட்டு அறிக்கைகள் பெறுமதி மதிப்பீட்டுத் திணைக்களத்தில் இருந்து கிடைப்பதில் தாமதம் காணப்படுகின்றது எனவும் அந்த அறிக்கைகள் கிடைத்த பின்னர் குறிப்பிட்ட வாகனங்களின் பெறுமதி மதிப்பீட்டுப் பெறுமதி பெற்றுக் கொள்ள முடியும் எனவும். | - மேற்படி - |

| | | |
|---|---|---|
| மதிப்பீட்டு வழு இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 3 இன் பிரகாரம் திருத்தி அமைப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நடைமுறைப் பொறுப்புக்களின் கீழ் காட்டப்பட்டிருந்த பிற்போடப்பட்ட வருமானம் ரூபா 244,076,700 தொகையாக காணப்பட்டதுடன், அவ்வவ் வருடங்களுக்காக இனங்காண வேண்டியிருந்த வருமானம் காலத் தேய்மானம் செய்திருக்காமையால் அவற்றில் ரூபா 20,544,858 தொகை பல வருட காலம் முதல் மாற்றமின்றி காணப்பட்டது. | சுய நிதியளிப்பு செய்பாடுகளின் கீழ் காணப்பட்ட பிற்போடப்பட்ட வருமானம் ரூபா 223,531,842 என காட்டப்பட்டிருந்தது. நடைமுறை ஆண்டிற்கு உரிய பிற்போடப்பட்ட வருமானக் கணக்கிற்கு / மாற்றப்பட்ட தொகை எனவும் மற்றும் நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறைப் பொறுப்புக்களின் கீழ் காட்டப்பட்டிருந்தது 2021 திசெம்பர் 31 திகதில் உள்ளவாறு ஆரம்ப மீதிகளும் உட்பட பிற்போடப்பட்ட வருமானமாக காணப்பட்டது என. | பல வருட காலம் முதல் காணப்படும் அறுதியாக இனங்கண்டிருக்காத மீதியை இனங்கண்டு சரியாக சீராக்கல் மேற்கொள்ள வேண்டும். |

### 1.5.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| விடயம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வு சான்றுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | ரூபா. | | | |
| பல்கலைக் கழகத்தின் வெல்லமடம வளாகம், ஹபுகல பொறியியல் பீடம் மற்றும் மாபலான விவசாய பீடம் ஆகியவற்றில் நிறுவப்பட்டிருந்த தொடர்பாடல் கோபுரங்களுக்காக அறவிடப்பட வேண்டியிருந்த வாடகைத் தொகை | 3,930,000 | குறிப்பிட்ட தொடர்பாடல் கம்பனியுடன் பல்கலைக்கழகம் அணுகியிருந்த புரிந்துணர்வு உடன்படிக்கை | இது தொடர்பாக ஞாபகப்படுத்தும் கடிதம் குறிப்பிட்ட தொடர்பாடல் நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டிருந்தது என. | இரு தரப்பினரும் இடையே மேற்கொண்டிருந்த புரிந்துணர்வு உடன்படிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 1.6 முற்பணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2006 ஆண்டு முதல் 2017 ஆண்டு வரையான காலப் பகுதியில் 08 சந்தர்ப்பங்களில் புத்தகங்கள் மற்றும் சஞ்சிகைகள் கொள்வனவு செய்வதற்காக வெளிநாட்டு வழங்குனர்களுக்கு முற்பணம் என ரூபா 553,695 தொகை செலுத்தியிருந்த போதிலும் 2021 திசெம்பர் 31 திகதி வரை கட்டளையிடப்பட்ட புத்தகங்கள் மற்றும் சஞ்சிகைகள் கிடைத்திருக்கவில்லை. எனினும் அந்த புத்தகங்கள் மற்றும் சஞ்சிகைகளை பெற்றுக் கொள்வதற்கு அல்லது செலுத்திய பணத்தை திருப்ப அறவீடு செய்வதற்கு முகாமைத்துவத்தினால் முடியாமல் இருந்தது. | இந்த தீர்க்கப்படாத முற்பணங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட விஷேட உள்ளகக் கணக்காய்வின் பரிந்துரையை செயற்படுத்துவதற்காக ஆளுகை சபையின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது எனவும் மற்றும் ஆளுகை சபை அங்கீகாரம் கிடைத்தவுடன் நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும். | புத்தகங்கள் மற்றும் சஞ்சிகைகள் பெற்றுக் கொள்வதற்கு அல்லது செலுத்திய பணத்தை திருப்ப அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 1.7 சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மை

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 394(இ) | பல்கலைக்கழகத்தின் 05 பீடங்கள் மற்றும் அலகுகளுக்குரிய 2019, 2020 மற்றும் 2021 ஆண்டுகளின் போது இரத்துச் செய்யப்பட்டிருந்த ரூபா 932,643 தொகைக்கான 138 வழங்கப்பட்ட காசோலைகள் தொடர்பாக நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என. | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2014 பெப்ரவரி 11 திகதிய 02/2014 இலக்கங் கொண்ட முகாமைத்துவ சேவை சுற்றறிக்கையின் பந்தி 4(II) | ஆய்வொன்று ஆரம்பிக்கப்பட்டு 06 மாதங்களுக்குள் ஆய்வின் முன்னேற்றம் உட்பட இடைக்கால ஆய்வு அறிக்கை ஒன்று ஆய்வு முகாமைத்துவ குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட | 06 மாதங்களுக்கு ஒரு முறை ஆய்வு முன்மொழிவிற்கு உரிய முன்னேற்றம் உட்பட அறிக்கை ஒன்று பெற்றுக் கொள்ளல் நடைமுறை ரீதியில் இயலாமல் இருந்த | முகாமைத்துவச் சேவை சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வேண்டியிருந்த போதிலும், மீளாய்வாண்டு உட்பட கடந்த 04 வருடங்களில் ஆய்வுகளின் முன்னேற்றம் உட்பட கிடைக்காத ஆய்வு அறிக்கை ஒன்று இந்த குழுவுக்கு சமர்ப்பித்து இருக்காத கராபிடிய மருத்துவ பீடத்தின் 17 கல்வி பிரிவுகளின் கல்விப் பதவியணி உத்தியோகத்தர்கள் 358 பேருக்கு ரூபா 137,268,775 தொகைக்கான முழு ஆய்வுக்குமான கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்தது. | போதிலும் எதிர்காலத்தில் அவ்வாறு மேற்கொள்ளப்படும் என. | |
| (இ) | 2015 ஜூலை 10 திகதிய 02/2015 இலக்கங் கொண்ட பொது நிதிச் சுற்றறிக்கை மற்றும் 2018 மார்ச் 19 திகதிய 01/2018 இலக்கங் கொண்ட சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கை | வாகனங்களை அப்புறப்படுத்தல் மூலம் கிடைக்கும் அனைத்து பணமும் திரட்டிய நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டியிருந்த போதிலும் கடந்த ஆண்டுகளின் போது அந்த வாகனங்களை விற்பனை செய்வதன் மூலம் கிடைத்திருந்த ரூபா 5,203,365 தொகை திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்படவில்லை. | வாகனங்களின் விற்பனை நிதியத்தின் மீதியை அரச வருமானத்திற்கு செலவு வைப்பதற்காக 2022 ஆண்டில் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என. | பொது நிதி மற்றும் சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (ஈ) | 2018 மார்ச் 19 திகதிய 01/2018 இலக்கங் கொண்ட சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கை | 2016 ஆம் ஆண்டு முதல் ஓட்ட நிலையில் இருந்து அகற்றப்பட்டிருந்த கைடிரக்டர் மற்றும் டேலர் முறைப் பிரகாரம் அப்புறப்படுத்துவதற்கு 2022 மே 25 திகதி அளவிலும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கைடிரக்டர் பாவணையில் இருந்து அகற்றி அப்புறப்படுத்து வதற்காக நிர்வாக பிரிவிற்கு அறிவுறுத்தப்பட்டுள்ள து என. | சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (உ) | 2002 நவம்பர் 28 திகதிய IAI/2002/02 இலக்கங் கொண்ட திறைசேரி சுற்றறிக்கை | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த கிரயம் ரூபா 174,331,393 தொகைக்கான கணினி மென்பொருள் மற்றும் வன்பொருளுக்காக தனியார் நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணப்பட்டு இருக்கவில்லை. | பல்கலைக் கழகத்திற்கு சொந்தமான கணினி மயப்படுத்தப்பட்டுள்ள நிலையான சொத்துக்கள் பதிவேட்டின் மூலம் கணினி மென்பொருட்கள் மற்றும் | திறைசேரி சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டியிருந்த போதிலும் கணினி மயப்படுத்தப்பட்ட நிலையான சொத்துக்கள் பதிவேடு உரிய |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | வன்பொருட்கள் தொடர்பாக தரவுகள் மற்றும் தகவல்கள் பெற்றுக் கொள்வதற்கு இயலுமை காணப்படுகின்றது என. | முறையில் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஊ) | 2019 ஜூலை 25 திகதிய SC & PMU/Grant/19 இலக்கங் கொண்ட வெளிநாட்டு மூலவள திணைக்களம் பணிப்பாளர் நாயகத்தின் கடிதம் | ஏனைய அரசுகள், வெளிநாட்டு அபிவிருத்தி தரப்பினர்கள் மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களினால் வழங்கப்படும் வெளிநாட்டு மானியங்கள் மற்றும் தொழிநுட்ப உதவிகள் வெளிநாட்டு மூலவள திணைக்களத்தின் ஊடாக அந்த திணைக்களம் அறிந்திருத்தல் மற்றும் இணக்கப்பாடு மீது பெற்றுக் கொண்டு நிதிப் பிரமாணம் 610 முதல் நிதிப் பிரமாணம் 626 வரையான அறிவுரைகளின் பிரகாரம் செயற்பட்டு பயன்படுத்த வேண்டியிருந்த போதிலும் கராபிடிய மருத்துவ பீடத்தின் ஒட்டுண்ணியல் கல்வி பிரிவிற்கு கிடைத்திருந்த ரூபா 51,591,900 இற்கான வெளிநாட்டு மானியம் தொடர்பாக அதன் படி செயற்படாமல் யானைக்கால் நோய் தொடர்பாக மேற்கொள்ளப்பட்டிருந்த செயற்திட்டம் ஒன்றிற்காக பயன்படுதப்பட்டிருந்தது. | இந்த நிதி மானியங்கள் குறிப்பிட்ட வெளிநாட்டு மூலவள திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என. | வெளிநாட்டு மூலவள திணைக்கள பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க அங்கீகாரம் பெற்றுக் கொண்டு அதன் பின்னர் மாத்திரம் செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 1,452,308,690 இற்கான மிகை ஒன்று காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மிகை ரூபா 293,250,162 தொகையாக இருந்தது. அதன்படி நிதி விளைவுகளில் ரூபா 1,159,058,528 இற்கான முன்னேற்றம் ஒன்று அவதானிக்கப்பட்டது. அந்த முன்னேற்றத்திற்கு அரசாங்க மீண்டு வரும் மற்றும் மூலதன மானிங்கள் போலவே உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வெகுமதிகளும் முக்கியமான காரணமாக இருந்து.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தேவைப்பாட்டை விட கூடுதலாக இருப்புக்கள் கொள்வனவு செய்திருந்த காரணத்தினால் 2022 ஜூன் 23 திகதி வரை ரூபா 99,092 தொகை கிரயத்திற்கான 161 லீற்றர் சாயம் காலவதியாகி வெல்லமடம பராமரிப்பு இருப்புக் களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தது. | 2020 ஆண்டிற்கு தேவையான குறைந்த சாய எண்ணிக்கையில் கவனம் செலுத்தி கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும் கொவிட் 19 நிலைமையின் காரணமாக பல்கலைக்கழகம் பல மாதங்கள் மூடவேண்டிய தேவை ஏற்பட்டமையால் எதிர்பார்த்தவாறு பராமரிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு முடியாமல் போனதால் இவ்வாறு ஏற்பட்டது என. | தேவையினை உரிய முறையில் இனங்கண்டு கொள்வனவு மேற்கொள்ளபட வேண்டியதுடன் கொள்வனவு செய்த பின்னர் விரயமாகாத முறையில் பயன்படுத்துவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | வெல்லமடம வளாகம் மற்றும் அதற்குரிய விடுதிகளின் மீளாய்வாண்டிற்கான மின் கட்டணங்களுக்காக குறிப்பிட்ட காலப் பகுதியில் கொடுப்பனவு மேற்கொள்ளப்படாத காரணத்தினால் ரூபா 53,137 இற்கான தண்டப் பணம் ஒன்று செலுத்துவதற்கு நேரிட்டிருந்தது. அதற்கு பொறுப்பு சொல்ல வேண்டிய தரப்பினரை இனங்காண்பதற்கு மற்றும் அது தொடர்பாக நடவடிக்கை ஏதும் எடுப்பதற்காக செயற்பட்டிருக்கவில்லை. | அப்போது நாட்டில் காணப்பட்ட கொவிட் 19 நிலைமை காரணமாக செலுத்த வேண்டிய மின் கட்டணம் உரிய முறையில் செலுத்த முடியாமல் போனது எனவும், கொவிட் தொற்றுநோய் நிலைமையை கவனத்தில் எடுத்து இந்த தண்டப்பணத்தில் இருந்து பல்கலைக்கழகத்தை விடுவிக்குமாறு இலங்கை மின்சார சபைக்கு கோரிக்கைவிடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என. | கருத்துத் தெரிவித்தவாறு நடவடிக்கை எடுத்து இந்த தண்டப் பணத்தில் இருந்து பல்கலைக்கழகத்தை விடுவித்து கொள்வதற்கு அல்லது பொறுப்புச் சொல்ல வேண்டிய தரப்பினரை இனங்கண்டு தொடர் நடவடிக்கை எடுப்பதற்கு செயற்பட வேண்டும். |

### 3.2 முகாமைத்துவத் திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 ஜூன் 17 திகதிய 413 ஆவது ஆளுகை சபை தீர்மானத்தின் மூலம் 2020 ஜனவரி முதல் செயற்படும் விதமாக அதிகரிக்கப்பட்டிருந்த வரி சதவீதத்தை அடிப்படையாகக் கொண்டு 2020 ஜனவரி முதல் 2021 ஒக்தோபர் மாதம் வரையான 22 மாதங்களுக்கான வெல்லமடம வளாகத்தின் குத்தகை வீடுகளில் | குறிப்பிட்ட குத்தகைத் தொகையை அறவீடு செய்யும் முறை தொடர்பாக தற்போது கலந்துரையாடப்பட்டு வருகின்றது எனவும் மற்றும் தவணைகளாக அந்தத் தொகையை குறிப்பிட்ட தரப்பினரிடம் அறவீடு செய்வதற்காக எதிர்காலத்தில் | நிலுவை வரித் தொகையை விரைவாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| இருந்து அறவிடப்பட வேண்டியிருந்த நிலுவை குத்தகை ரூபா 3,498,300 தொகை 2021 திசெம்பர் 31 திகதி அளவில் அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நடவடிக்கை எடுக்கப்படும் என. | |

### 3.3 சர்ச்சைக்குரிய தன்மையுள்ள கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பல்கலைக்கழக பதவியணிக்காக நிறுவப்பட்டிருந்த அக்ரஹார காப்புறுதி நிதியக் கணக்கை உறுதிப்படுத்துவதற்காக கடந்த ஆண்டு வழங்குனர்களிடமிருந்து அறவீடு செய்திருந்த தாமதம் கட்டணம் ரூபா 10,000,000 தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. | அக்ரஹார காப்புறுதிக்காக பயன்படுத்தப்பட்டிருந்தது பல்கலைக்கழத்திற்கு திறைசேரியில் இருந்து கிடைத்த பணமன்றி உடன்படிக்கைகளை மீறிய வழங்குனர்களிடம் அறவிடப்பட்ட பணமாகும் என. | வழங்குனர்களிடம் அறவிடப்பட்ட தாமதக் கட்டணம் பல்கலைக்கழக நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டும். |

### 3.4 ஒப்பந்தவேலை நிருவாகத்தில் பயன்பாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மதிப்பீட்டுக் கிரயம் ரூபா 341.60 மில்லியன் தொகைக்கான வெல்லமடம வளாகத்தின் விளையாட்டுத் திடலை அபிவிருத்தி செய்வதற்காக மற்றும் விளையாட்டு மண்டபம் நிர்மாணிப்பதற்கான நிர்மாண வேலையின் மண் பரிசோதனைக்காக ரூபா 200,750 தொகையும், பெறுகைக் குழு கொடுப்பனவு என ரூபா 85,000 தொகையும் விலைகூறல் தயாரித்தலுக்கான கொடுப்பனவு என ரூபா 243,576 தொகையுமாக 2017 மற்றும் 2018 ஆண்டுகளின் போது ரூபா 529,326 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், 2021 திசெம்பர் 21 திகதி அளவிலும் நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | உயர் கல்வி அமைச்சினால் இந்த செயற்திட்டத்திற்காக நிதி ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்ததுடன், அதற்காக அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்திருந்தது எனவும் பெறுகை அலுவல்கள் ஆரம்பிக்கும் படி அறிவித்த பின்னர் ஆரம்ப வேலைகளுக்காக ரூபா 529,325 தொகை செலவிடப்பட்டிருந்தது எனவும் மற்றும் விலைகூறல் மதிப்பாய்வு அலுவல்கள் முடிவடையும் போது 2020 செப்தெம்பர் 14 திகதி நிதி அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த அமைச்சரவை விஞ்ஞாபனத்தை கவனத்தில் எடுத்து இந்த செயற்திட்டத்தை வேறொரு கட்டத்தில் ஆரம்பிக்கும் படி அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியிருந்தமையால் செயற்திடத்தின் நிர்மாணவேலை அலுவல்கள் ஆரம்பிக்க முடியாமல் போனது என. | செலவிடப்பட்ட தொகை விளைவற்ற செலவொன்றாக ஆக்காமல் இருப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மதிப்பீட்டுக் கிரயம் ரூபா 400.42 மில்லியனுக்கான வெல்லமடம வளாகத்தின் நிர்வாகக் கட்டடத்தின் பிரதான நவீனமயப்படுத்தல் அலுவல்களுக்காக உசாத்துணை சேவைகளுக்காக மற்றும் தொழிநுட்ப மதிப்பாய்வுக் குழு கொடுப்பனவாக 2020 ஆண்டில் ரூபா 1,898,164 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், 2021 திசெம்பர் 21 திகதி வரை இந்த நவீனமயப்படுத்தல் அலுவல்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | ஒப்பந்தக்காரரினால் முழு கட்டிடத்தையும் நவீன மயப்படுத்துவதற்காக வழங்குமாறு கோரியிருந்தது எனவும், வருடாந்த இறுதிக் கணக்குகள் தயாரிக்கப்பட்டு வந்த காரணத்தினால் நிதிப் பிரிவு அவ்வாறு ஒரே தடவையில் வழங்க முடியாது எனவும் அந்த பிரிவு தவிர ஏனைய விடுவிக்க கூடிய பிரிவுகளின் வேலையை ஆரம்பிக்குமாறு ஒப்பந்தகாரருக்கு ஆலோசனை வழங்கப்பட்டது எனவும், ஒப்பந்ததாரரினால் முற்பணத் தொகையொன்று கோரியிருந்த போதிலும் அப்போது காணப்பட்ட நிதி நெருக்கடி காரணத்தினால் பணம் செலுத்த முடியாமல் போனது எனவும், 2021 ஜனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களில் நடைபெற்றிருந்த பெறுகைக் குழு மற்றும் ஆளுகை சபையினால் இரு தரப்பினரின் இணக்கப்பாட்டுடன் ஒப்பந்த வேலையை இடைநிறுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டது எனவும். | - மேற்படி - |